DEPOSITION OF WITNESS

Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT,
VANUR.

Calender - C.C.No. 203/2026
Miscellaneous -

Sessions -

Deposition of witness for Prosecution PW2 (LW2)
Defence

Name : Uthirakumar

Father Name /
Husband Name : Sivaprakasam

Village :

Taluk :

Caste : -

Calling :

Religion :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 the day of 27th day of July 2026.

எதிரி ஆஜர்.

முதண்மை விசாரணை

நான் தற்போது கோட்டக்குப்பம் காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 20.06.2025 அன்று நான் கோட்டக்குப்பம் மதுவிலக்கு சோதனைசாவடியில் தலைமை காவலராக பணியிலிருந்தேன். என்னுடன் த.கா.மகேந்திரன் பணியில் இருந்தார். நாங்கள் வாகன தணிக்கையில் ஈடுபட்டுக்கொண்டிருந்தபோது பாண்டி டூ சென்னை மார்க்கமாக வந்த தனியார் பேருந்தை நிறுத்தி தணிக்கை செய்தபோது வழக்கின் ஆஜர் எதிரி

கோவிந்தராஜ் வைத்ததிருந்த உடைமைகளை சோதனை செய்தபோது அதில் அந்நிய மாநில மதுபானங்கள் Mcdowells VSOP Brandy 750ml- 1nos, XXX VSOP brandy 750ml- 3Nos, Majestic brandy 90ml- 5nos பாட்டில்கள் இருந்தது அவற்றை அசா.1 என் முன்னிலையில் கைப்பற்றுதல் மகசர் தயார் செய்து கைப்பற்றினார். மேற்படி கைப்பற்றுதல் மகசர் ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி கைப்பற்றப்பட்ட Mcdowells VSOP Brandy 750ml- 1nos, XXX VSOP brandy 750ml- 3Nos, Majestic brandy 90ml- 5nos பாட்டில்களின் புகைப்படம் ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது. பின்பு அசா.1 எதிரி மற்றும் கைப்பற்றப்பட்ட மேற்படி வழக்கு சொத்துக்களுடன் நிலையம் வந்து ஆய்வாளர் அறிவழகியிடம் இது சம்மந்தமாக தனி அறிக்கை தாக்கல் செய்தார். தனிஅறிக்கையில் படி ஆய்வாளர் நிலைய குற்ற எண்.236/2025 பிரிவுகள் 4(1)(C) TNP Amendment Act, எதிரியின் மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தார். ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

நாங்கள் சோதனை செய்ததாக சொல்லப்படும் சாலை அதிக மக்கள் நடமாட்டம் உள்ள சாலை என்றால் ஓரளவுக்கு மக்கள் நடமாட்டம் இருக்கும். பஸ்சினுள் ஏறி யார் சோதனை செய்தார்கள் என்று ஆய்வாளர் என்னை விசாரித்தபோதும் எனது தனிஅறிக்கயிலும் நான் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல.

ஆய்வாளர் என்னை விசாரித்தபோது சோதனை செய்த பேருந்தின் பதிவு எண்ணோ அல்லது மற்ற குறிப்புகள் எதுவும் நான் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். எதிரி எதில் மதுபானபாட்டில்களை எடுத்து வந்தார் என்று ஆய்வாளர் விசாரணையில் நான் சொல்லவில்லை என்றால் சரியல்ல.

எதிரி மதுபாட்டில்களை பையில் வைத்திருந்தார் என்று குறிப்பிட்டு நிலையில் அந்த பை கைப்பற்றப்படவில்லை என்றால் சரிதான். தனியார் பேருந்தில் பயணித்த பயணிகளை ஆய்வாளர் சாட்சியாக விசாரித்தாரா என்றால் இல்லை.

தனிநபர்கள் யார் முன்னிலையிலும் கைப்பற்றுதல் மகசர் தயார் செய்யப்படவில்லை என்றால் சரிதான். படிவம் 91ல் என் கையொப்பம் இல்லை என்றால் சரிதான்.

நான் சொன்ன தேதியில் சொன்ன நேரத்தில் எந்த வாகனத்தையும் தணிக்கை செய்யவில்லை என்றாலும் எனது மேல்அதிகாரி கேட்டு கொண்டதற்கு இணங்க தவறான தனிஅறிக்கை கொடுத்து அதன்அடிப்படையில்

தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

DEPOSITION OF WITNESS

Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT, VANUR.

Calender - C.C.No. 203/2026
Miscellaneous -

Sessions -

Deposition of witness for Prosecution PW3 (LW3)
Defence

Name : Arivazhagi

Father Name /
Husband Name :

Village :

Taluk :

Caste : -

Calling :

Religion :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 the day of 27th day of July 2026.

எதிரி ஆஜர்.

முதண்மை விசாரணை

நான் தற்போது திருக்கோவிலூர் மதுவிலக்கு அமல்பிரிவு காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 20.06.2025 அன்று நான் கோட்டக்குப்பம் மதுவிலக்கு அமல்பிரிவில் காவல் ஆய்வாளராக பணியிலிருந்தேன். அன்றைய தினம் கோட்டக்குப்பம் மதுவிலக்கு சோதனைசாவடியில் பணியிலிருந்த த.கா.திரு.மகேந்திரன் ஆஜர் எதிரியை ஆஜர்படுத்தி தனிஅறிக்கையுடன் இவ்வழக்கின் சொத்துக்க ளுடன்

ஆஜர்படுத்தியதை நான் பெற்று மேற்படி தனிஅறிக்கையின் அடிப்படையில் நான் நிலைய குற்ற எண்.236/2025 பிரிவுகள் 4(1)(C) TNP Amendment Act, எதிரியின் மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். மேற்படி முதல் தகவல் அறிக்கை **அசா.ஆ-4** ஆகும். அசா.1 மற்றும் அசா.2ஐ விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செயதேன். எதிரியை தக்க இருநபர் காவல் நிலைய பிணையில் விடுவிக்கப்பட்டார். கைப்பற்றப்பட்ட வழக்கு சொத்துக்களான மதுபான பாட்டில்களை படிவம் 91மூலம் கணம் நீதிமன்றதிற்கு அனுப்பி வைத்தேன். மேற்படி படிவம் 91 **அசா.ஆ-5** ஆகும். பின்வு வழக்கினை முடித்து எதிரி மீது 4(1)(C) TNP Amendment Act, பிரிவுகளின் கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

அசா.1 மற்றும் அ.சா.2ஐ நான் விசாரித்தபோது சோதனை செய்த பேருந்தின் பதிவு எண்ணோ அல்லது மற்ற குறிப்புகள் எதுவும் அவர்கள் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். எதிரி எதில் மதுபானபாட்டில்களை எடுத்து வந்தார் என்று என் விசாரணையில் அசா.1 மற்றும் அ.சா.2 சொல்லவில்லை என்றால் சரியல்ல.

எதிரி மதுபாட்டில்களை பையில் வைத்திருந்தார் என்று குறிப்பிட்டு நிலையில் அந்த பை கைப்பற்றப்படவில்லை என்றால் சரிதான். தனியார் பேருந்தில் பயணித்த பயணிகளை நான் சாட்சியாக விசாரித்தாரா என்றால் இல்லை.

எனது மேல்அதிகாரி கேட்டு கொண்டதற்கு இணங்க தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

N PREETHI

Digitally signed by N PREETHI
Date: 2026.07.27 16:09:26 +0530

நீதித்துறை நடுவர்,
வானூர்.